

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணையில் வரப்புகளில் உளுந்து சாகுபடி, பூச்சி நோய் கண்காணிப்பு திடல், நெல் விதைப்பண்ணைகள் ஆகியவற்றை இன்று (09.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 616/2016 நாள்: 09.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வேளாண் பொறியியல்துறை சார்பாக வேளாண் சேவை மையம் மற்றும் திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணையில் இன்று (09.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகள் நன்மைக்காக செயல்பட்டு வரும் வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை ஆகியவற்றின் செயல்பாடுகளையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கிழக்கு சரக்கல்விளையில் வேளாண்மைப் பொறியியல் துறையில் ரூ.10 லட்சம் மானியத்தில் டிராக்டர், ரோட்டாவேட்டர், வைக்கோல் கட்டும் எந்திரம், நெல் நடவு எந்திரம், ஷ்ரெட்டர் மற்றும் பல்வரைசர் ஆகியவை மிர்துன் அக்ரோ சர்வீசஸ் என்ற தொழில்முனைவோர் நிறுவனத்தால் வாங்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வாடகைக்கு விடப்படுகிறது. இந்த எந்திரங்களின் மொத்த மதிப்பு ரூ.25.1290 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் தொழில் முனைவோரின் பங்குத்தொகை ரூ.15.1290 இலட்சம் ரூபாய் ஆகும். இது உரிய காலத்தில் விவசாய பணிகளை செய்வதற்கும், விவசாயத்தில் எந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும், தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும் மிகவும் உதவியாக உள்ளது. இந்த மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

அதனை தொடர்ந்து திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணையில் வரப்புகளில் உளுந்து சாகுபடி, பூச்சி நோய் கண்காணிப்பு திடல், நெல் விதைப்பண்ணைகள் ஆகியவற்றை பார்வையிட்டார். அங்கு தென்னங்கன்று நடவு செய்தார்.

மேலும் வேளாண்மைப் பொறியியல் துறையால் 22.18755 லட்சம் ரூபாயில் முடிக்கப்பட்டுள்ள கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். இங்கு கம்பிவேலி அமைத்தல், காரைவாய்க்கால் அமைத்தல், தடுப்புச்சுவர் கட்டுதல், சேமிப்பு கிடங்கு புதுப்பித்தல், உலர்களம் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டிருந்தது அரசு விதைப்பண்ணையின் உற்பத்திக்கும், விவசாயிகளின் விதைகளை உரிய சமயத்தில் சுத்திகரிப்பு செய்து பாதுகாப்பாக வழங்குவதற்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர்(மத்திய திட்டம்) திரு.சந்திரசேனன்நாயர், வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் திரு.ஆனந்தராஜா, உதவி செயற்பொறியாளர்கள் திரு.இராதாகிருஷ்ணன், திரு.ஆனந்தபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.